நாகை மாவட்டம்நாகூர் சம்பா தோட்டம் சுனாமி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த மாணிக்கம், கடந்த வாரம் கடலில் மீன்பிடித்து கொண்டு இருக்கும் போது தவறி விழுந்து மாயமானார். அவரது குடும்பத்திற்கு கழகத்தின் சார்பில் நிவாரண நிதியை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார். உடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவரும், மாவட்ட கழக செயலாளருமான கௌதமன் மற்றும் பலர் உள்ளனர்.

சேலம் மாநகர் பகுதிகளில் எல்லா நாட்களிலும் குடிநீர் விநியோகம்!

"கழக அரசு நடவடிக்கை எடுக்கும்!" – பேரவையில், அமைச்சர் கே.என்.நேரு உறுதி!

சென்னை, ஏப்.1-

"சேலம் மாநகர் பகுதியில் எல்லா நாள்களிலும் குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு உறுதியளித்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது - இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

ஈ.பாலசுப்பிரமணியன்: சேலம் மாநகராட்சி, 41-வது கோட்டம், சேர்மன் இராமலிங்கம் சாலையில் பாதாள சாக்கடை மற்றும் தார்ச் சாலை அமைக்க அரசு முன் வருமா?

அமைச்சர் கே.என். நேரு: சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட சேர்மன் இராமலிங்கம் சாலையில் இரண்டு வருடத்திற்கு முன்பு பாதாளச் சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கப்பட்டு, 121 எண்ணிக்கையில் வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு, தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது. சீர்மிகு நகரங்களின் திட்டத்தின்கீழ் 24/7 குடிநீர் வழங்கல் மேம்பாட்டு திட்டப் பணிகளால் சேதமடைந்த தார்ச்சாலைகள் 2023-2024 ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்டன. மூன்று இடங்களில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைப் பணிகள் பழுது மேற்கொள்ளப்பட்டு, அவ்விடங்களில் concrete மூலம் சாலை ஒட்டுப் பணிகள் patch works மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன.

ஈ. பாலசுப்பிரமணியன்:

எப்பொழுது இந்தப் பணிகள் எல்லாம் முடிக்கப்பட்டு, பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக சேலம் மாநகராட்சிக்கு செயல்படுத்தப்படும் ?

அமைச்சர் கே.என். நேரு: சேலம் மாநகராட்சியில் தற்போது மக்கள் தொகை 10 இலட்சத்து 83 ஆயிரத்து 625 ஆகும். இம்மாநகராட்சியில் 60 Ward உள்ளன. மாநகராட்சியின் மொத்தப் பரப்பளவு 91.34 சதுர கி.மீ. ஆகும். இந்த மாநகராட்சியில் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 653 குடியிருப்புகள் உள்ளன. சேர்மன் இராமலிங்கம் சாலையானது 416 மீட்டர் நீளமாகும். இதில் 416 மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தெருவில் 522 வீடுகள் உள்ளன. இதில் 121 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு இதுவரை பாதாளச் சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 401 வீடுகளுக்கு பாதாளச் சாக்கடை இணைப்புகள் வழங்குவது நடவடிக்கையில் உள்ளன. சேலம் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் 24/7 இச்சாலைகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும் இச்சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைப் பராமரிப்பு பணிகள் முடியும்போது, அவ்வப்போது patch works concrete-மூலம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வேலை ஆரம்பித்து நீண்டகாலம் ஆகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அந்தச் சாலைகள் எல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, உரியமுறையில் அதிகாரிகளுக்கு அதைச் சொல்லி இணைப்புகள் முடிந்தால்தான் புதிய சாலைகள் போடமுடியும். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். பாதாளச் சாக்கடைத் திட்டமோ, குடிநீர்ப் பணிகளோ அந்தத் திட்டம் முடிந்தபிறகு, இல்லந்தோறும் அவர்கள் கட்டவேண்டிய பணத்தைக் கட்டி, இணைப்புகள் வீடுகளுக்கு கொடுத்தபிறகுதான் முழுமையாக தார் road போட இயலும். அதனால் தான் இந்த இரண்டு திட்டங்களிலும் தாமதமாவதற்கு அதுதான் காரணம்; இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, உடனடியாக அந்தச் சாலைகளைப் அமைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈ. பாலசுப்பிரமணியன்: சேலத்தில் குகைப் பகுதி என்னுடைய பகுதியில் இரண்டு நாளைக்கு ஒருமுறை, மூன்று நாளைக்கு ஒருமுறை வந்து கொண்டிருந்த தண்ணீர் இப்போது மிகவும் தாமதமாக ஐந்து நாட்கள், ஆறு நாட்களுக்கு ஒரு முறை வருகிறது. அது ஏன் என்பது குறித்து அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பாரா?

அமைச்சர் கே.என். நேரு: நமது கழக அரசு தளபதி தலைமையில் அமைந்த 2021-ல் இருந்து, TWAD மூலம் 11 இலட்சம் மக்களுக்கு, 179 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி மற்றும் நகராட்சி மூலம் 11 இலட்சம் மக்களுக்கு 145 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பேரூராட்சிகள் மூலம் 5 இலட்சம் மக்களுக்கு 10 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆக 27 இலட்சம் மக்களுக்கு 334 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே உறுப்பினர் அவர்கள் சொல்வது, எதாவது குழாய்கள் பழுது பட்டிருக்குமானால் அல்லது அங்கு எதாவது motor-களோ சரியாக இயங்கவில்லை என்று சொன்னால், உறுப்பினர் அவர்களின் கருத்தை எடுத்துக் கொண்டு, மறுபடியும் அதிகாரிகளுடன் பேசி, ஐந்து நாள் என்பதை தினந்தோறும் கொடுப்பதற்குரிய எல்லா—ஏனென்றால் சேலத்தை பொறுத்தவரையில் தண்ணீர் பஞ்சமில்லை. புதிய குடிநீர் திட்டம் வந்திருக்கிறது. எனவே, என்ன தாமதம் என்று தெரிவில்லை, அதிகாரிகளுடன் பேசி, தினந்தோறும் தண்ணீர் வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

உயர் கல்வித் துறையின் சார்பில் ஈரோடு வீரப்பன் சத்திரம் சிக்கய நாயக்கர் அரசு உதவி பெறும் கல்லூரியினை சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பெயர் மாற்றம் செய்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, உயர் கல்வி துறை அமைச்சர் கோ.வி.செழியன் ஆகியோர் பெயர் பலகையை திறந்து வைத்தார்கள். நிகழ்வில் கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், கோவை மண்டல இணை இயக்குநர் (கல்லூரி கல்வி இயக்கம்) முனைவர் நெ.கலைச்செல்வி, கல்லூரி முதல்வர் திருக்குமரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில்

கழக தலைவர் பிறந்தநாள் விழா 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் - அன்னதானம்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

திருவாரூர், ஏப்.1-

திருத்துறைப்பூண்டி நகர கழகம் சார்பில், நகர கழக செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் ஏற்பாட்டில் கழக தலைவர், திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள்விழா எழுச்சியோடு நடைபெற்றது. இந்த விழாவில் ஏழை, எளிய, ஆதரவற்ற மக்கள், மாணவ மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், தூய்மை பணியாளர்கள் என 1500பேர்களுக்கு நலத்திட்ட உதவிகளும், அன்னதானமும் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி துணை, தாட்கோ தலைவர்நா. இளையராஜா, முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் என். வி.காமராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தனர்.

இந்த விழாவில் நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் வரவேற்புரை வாசித்தார். தொகுதி பொறுப்பாளர் என். வி.காமராஜ், மாவட்ட துணை செயலாளர் எம். எஸ்.கார்த்திக், ஒன்றிய செயலாளர்கள் இரா. மனோகரன், பால.ஞானவேல், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில் ராஜேந்திரன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சிக்கந்தர், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், விளையாட்டு மேம்பாடு அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஐ.ஜி.எஸ் .ஜாகிர் உசேன், நகர்மன்ற முன்னால் தலைவர் மணிமாறன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வினோத்குமார், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் கழக கொடியேற்றி, மரன்றுகள் நடுதல், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், மகளிருக்கு தையல் எந்திரங்கள் வழங்குதல், குடும்பத்தினருக்கு மாடும் கன்றும் வழங்குதல், சலவை பெட்டிகள் வழங்குதல், மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்குதல், ஆதரவற்ற வர்களுக்கு ஆடைகள் வழங்குதல், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் , தூய்மை பணியாளர்களுக்கு சீருடை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளும் 1500பேர்களுக்கு அசைவத்துடன் கூடிய அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது.

விழாவில் நகர கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட, ஒன்றிய நகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் ஊராட்சி, ஒன்றிய குழு உறுப்பினர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள், நகர வார்டு கழக நிர்வாகிகள் , பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

முடிவில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் கோ.வசந்த் நன்றி கூறினார்.

தமிழ்நாட்டு மக்களுக்காக குரல் கொடுத்து உழைத்திடும்

முதல்வரின் கரங்களை வலுப்படுத்த துணையாக இருப்போம்!

கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. பேட்டி!

கிருஷ்ணகிரி, ஏப். 1–

தமிழ்நாட்டு மக்களுக்காக குரல் கொடுத்து உழைத்துக் கொண்டிருக்கும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் கரங்களை வலுப்படுத்த நாமெல்லாம் துணையாக இருப்போம் என கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. பேட்டியளித்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது.

நாடாளுமன்ற தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய பாஜக அரசு பல மாநிலங்களுக்கு ஆபத்தை விளைவிக்க இருக்கிறது. இதை தடுக்க முதலமைச்சர் தளபதியார் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். அதே போல 100 நாள் வேலை உறுதி திட்டத்திலும் கிராம புற மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகிறது.

தொகுதி மறு சீரமைப்பு என்பது தமிழகம் உள்பட பல மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இதை தடுக்க முதலமைச்சர் முதல் கட்டமாக அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டினார். இதில் 58 கட்சிகளை சேர்ந்தவர்கள் பங்கேற்று ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக கண்டன குரல் எழுப்பினார்கள். அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மான அடிப்படையில் கூட்டு குழு அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன் மூலமாக பாதிக்கப்படும் பிற மாநில முதலமைச்சர்கள், கட்சிகளை அழைத்து முதலமைச்சர் கூட்டம் நடத்தினார். இதில் 3 மாநில முதலமைச்சர்கள், 2 மாநில துணை முதலமைச்சர்கள், பல அரசியல் கட்சி தலைவர்கள் பங்கேற்று தங்களின் கண்டன குரலை பதிவு செய்தனர்.

1976 ம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திரா காந்தி மக்கள் தொகை கட்டுப்படுத்த திட்டத்தை கொண்டு வந்தார். இதை தமிழகம் முறையாக செயல்படுத்தியது. இதை முறையாக செயல்படுத்திய மாநிலங்கள் இன்று தொகுதி மறு சீரமைப்பில் பல தொகுதிகளை இழக்க ஒன்றிய அரசு முயற்சிக்கிறது. ஒன்றிய அரசுக்கு ஜி.எஸ்.டி. என்ற பெயரில் நாம் 100 ரூபாய் செலுத்தினால் நமக்கு 29 ரூபாய் திரும்ப தருகிறார்கள். அதுவே உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற வடமாநிலங்களுக்கு 425 ரூபாய் திரும்ப கொடுக்கிறார்கள். நமது மாநிலத்திற்கு தர வேண்டிய நிதியை கூட தர மறுக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் கல்வித்துறைக்கு தேவையான நிதியை தர மறுக்கிறார்கள். கேட்டால் மத்திய கல்வித்துறை அமைச்சர் தமிழக எம்.பி.க்களை நாகரீகமற்றவர்கள் என பேசுகிறார். தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் தொடர்ந்து ஒன்றிய பாஜக அரசு அநீதி இழைத்து வருகிறது. அவர்களால் மணிப்பூர் கலவரத்தை கட்டுப்படுத்த முடிந்ததா. அங்குள்ள மக்களால் நிம்மதியாக வாழ முடிகிறதா. காரணம் அந்த மாநில மக்கள் பிரதிநிதி நாடாளுமன்றத்தில் இல்லாததே. நாடாளுமன்றத்தில் நமது குரல் எழுப்ப போதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவை. அதை தடுக்க தான் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழகத்தை வஞ்சிக்க ஒன்றிய பாஜக அரசு முயற்சிக்கிறது.

ராஜஸ்தான் மாநிலத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்பு அந்த மொழி பேசியவர்களின் எண்ணிக்கை 85 சதவீதம். மாறாக இந்தி வேண்டுமா என்ற போது இந்தியை ஏற்றுக் கொண்டதால் விளைவு இன்று 85 சதவீத மக்கள் இந்தி மொழி பேசுகிறார்கள். ராஜஸ்தானில் அவர்களின் தாய்மொழி அழிக்கப்பட்டு விட்டது.

மகாத்மா காந்தி 100 நாள் வேலை திட்டத்தில் பணிபுரிந்து வந்த கிராமப்புற மக்களையும் ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது. அவர்களுக்கு தேவையான நிதியை தரமறுக்கிறார்கள். இவ்வாறு தமிழகத்தை தொடர்ந்து புறக்கணிக்கும் ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக பேராடும் தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு அனைவரும் உறுதுணையாக இருப்போம் என அவர் கூறினார்.

மக்கள் தொகை தொகுதி அடிப்படையில் மறுசீரமைப்பு!

தென் மாநிலங்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படும்!

தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. பேச்சு!

தருமபுரி. ஏப்.1-

தேசிய ஊரக வேலைஉறுதி திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடியை தராமல் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து தருமபுரியில் பல்வேறு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில் தெரிவித்ததாவது:

ஒன்றிய பா.ஜ.க. அரசு மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியினை தராமல் காலம் தாழ்த்துவது ஏற்புடையதல்ல. ஒன்றிய அரசின் மும்மொழி கொள்கையை ஏற்றால் மட்டுமே மாநில அரசிற்கான கல்வி நிதியினை அளிப்போம் என்று ஒன்றிய அரசு இந்த நிதியினை வழங்காமல் இருந்து வருகிறது.

கழகத்தலைவர் - முதலமைச்சர் என்றும் மக்களுக்கு பயன்படும் இரு

மொழிகொள்கையே தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.இதே போல் தொகுதி வரையறை என்ற பெயரில் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி வரையறை செய்யப்படும் என்ற ஒன்றிய அரசின் அறிவிப்பால் தமிழ்நாடு. ஆந்திரா. தெலுங்கானா. கேரளா. ஒடிசா போன்ற மாநிலங்கள் பெருமளவில் பாதிக்கப்படும் என்பதால் கடந்த 5 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் இந்த தொகுதி வரையறை மூலம் பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்களை சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி கூட்டத்தினை கூட்டினார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட 58 கட்சிகள் தொகுதி வரையறைக்கு எதிரான தீர்மானத்திற்க்கு ஆதரவளித்துள்ளனர்.மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டு நடவடிக்கை குழு என்ற குழுவினை உருவாக்கி கடந்த 22 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தொகுதி மறுவரையை இன்னும் 25 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரை செய்யப்படுமேயானால் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது.இதனால் வட மாநிலங்கக்கு அதிகமான மக்கள் பிரதிநிதிகள் கிடைப்பார்கள் உதாரணமாக மணிப்பூரில் மக்கள் தொகை குறைவாக உள்ள காரணத்தால் மக்கள் பிரதிநிதிகளும் குறைவாக உள்ளனர்.அவர்களது தேவை உரிமைகளுக்கு கூட போராட வேண்டிய நிலை உள்ளது.தமிழ்நாட்டில் நாம் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துள்ளோம்.ஆனாலும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து போராடியே தமிழ்நாட்டிற்கு முறையாக தரவேண்டிய நிதி.திட்டங்கள் போன்றவற்றை பெற்று வருகிறோம்.

இந்த மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுசீரமைத்தால் தொகுதிகள் குறைக்கப்பட்டால் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பலம் குறையும் இந்த திட்டம் தென் மாநிலங்களுக்கு தலைக்கு மேல் உள்ள கத்தி போன்றது.நமக்கான உரிமைகளை பெறுவது சவாலாக மாறிவிடும் எனவே இந்த திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் நடத்துகின்ற இந்த போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும். தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு ஆ.மணி கூறினார்.

ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து காரமடை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி. கல்யாணசுந்தரம், இந்து சமய அறநிலையத் துறை கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப் பினர் கவிதா கல்யாண சுந்தரம் தலைமையில், பேரூர் கழக செயலாளர் உதயகுமார் முன்னிலை யில் இரும்பறை ஊராட் சியில் பேருந்து நிறுத்தம், ஜடையம் பாளையம் ஊராட்சியில் ஆலங் கொம்பு பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட இரு இடங்களில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது.

திருத்துறைப்பூண்டி நகர கழகம் சார்பில், நகர கழக செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற கழக தலைவர் , தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள்விழாவில், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சிறப்புரையாற்றினார். மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, தொகுதி பொறுப்பாளர் என்.வி.காமராஜ் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.